# காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் தமிழ்நாடு முன்னுதாரணமாக இருக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!...

முதல் பக்கத் தொடர்ச்சி

ஆசியவளர்ச்சிவங்கிநிதியுதவியோடு, காவிரி கழிமுக பகுதியில், பருவநிலை மாறுதல் தழுவல் திட்டம், கடற்கரை மாவட்டங்களை புயல்களிலிருந்து பாது காத்தல், காலநிலை மாறுபாடு களினால் ஏற்படும் வெள்ள அபாயங்களை தணித் தல், பாசன வசதியை மேம்படுத்துதல், கடல்நீர் உட்புகுவதை தடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஆறுகள் - நீரேற்று நிலங்களை மேம்படுத்த ரூ.825 கோடியில் திட்டம்!**

இந்தத் திட்டத்தின் முதல் பகுதியாக, அடப்பாறு, ஹரிச்சந்திரா நதி, வெள்ளை யாறு, பாண்டவையாறு, வளவனாறு, வேதாரண்ய கால்வாய் ஆகிய 6 ஆறுகள் மற்றும் 13 நீரேற்று நிலையங்களின் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, வெண்ணாறு, பாமினியாறு, கோரையாறு, மனங் கொண்டனாறு, மரக்கா கோரையாறு, கடுவையாறு ஆகிய 6 ஆறுகள் மற்றும் 6 நீரேற்று நிலையங்களை மேம்படுத்து வதற்காக, முதல்நிலை திட்ட அறிக்கை ஆயிரத்து 825 கோடி ரூபாய் மதிப்பில் தயார் செய்யப்பட்டு, இந்திய அரசின் பொருளாதார விவகாரத் துறைக்கு, கட னுதவி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டு, ஆயத்த பணிகள் நடைபெற்று வருகிறது.

இவை அனைத்துமே, இயற்கையைப் பாதுகாப்பதில் நம் மாநிலம் முன்னணி யில் இருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்நாடு ஈரநில இயக்கத்தின் முயற் சிகளால், தமிழ்நாட்டில் இருந்த ராம்சர் தளங்களின் எண்ணிக்கை ஒன்றிலி ருந்து 18ஆக அதிகரித்திருக்கிறது. இதன் மூலம் முக்கியத்துவம் வாய்ந்த சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதில் நம்மு டைய அரசுக்கு உறுதிப்பாட்டை நீங்கள் அறியலாம்.

தமிழ்நாட்டின் காலநிலை முன்னெ டுப்புகளின் வெற்றிக்குக் காரணமாக இருப்பது, பொதுமக்கள் பங்கேற்புதான் என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இளைஞர்களிடையே அதிகரிப்பு!**

“மீண்டும் மஞ்சப்பை” போன்ற பரப்பு ரைகள் துணிப்பைகளின் பயன்பாட்டை அதிகரித்திருக்கிறது. ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருட் களின் பயன்பாட்டை கணிசமாக குறைத் திருக்கிறது. முன்பு இருந்ததைவிட, இப் போது சுற்றுச்சூழல் குறித்த விழிப்பு ணர்வு மக்களிடையே, குறிப்பாக, இளை ஞர்களிடையே அதிகமாகி இருக்கிறது.

இந்த விழிப்புணர்வை பயன்படுத்தி திட்டங்களைத் தீட்டி வருகிறோம். வெப்ப உயர்வு தடுப்பு நடவடிக்கைகளை உட னடியாக முன்னெடுக்க வேண்டும் என்ற எச்சரிக்கையை ஐ.நா. காலநிலை மாற் றத்திற்கான குழு சொல்லி இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம்.

வெப்ப அலையை, மாநிலப் பேரிடராக தமிழ்நாடு அரசு அறிவித்து, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. வெப்ப அலையை எதிர்கொள்வதற்கான நீர்ச்சத்து மிகுந்த பொருட்களை வழங்க மாநில பேரிடர் மேலாண்மை நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம். வெப்ப அலை தாக்கத்தின் போது தண்ணீர் பந்தல்கள் அமைத்து குடிநீர் வழங்குவதற்கும் மாநில பேரிடர் மேலாண்மை நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என அரசு தெரிவித்துள்ளது.

**வெப்ப அலைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை!**

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் கடு மையான வெயில் வாட்டியது. வெப்ப அலை மேலாண்மை தொடர்பாக என் னுடைய தலைமையில் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு, இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூகநல மையங்கள், மகப்பேறு மருத் துவமனைகள் ஆகியவற்றில் வெப்ப அலையால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை அளிக்கும் வசதிகள் ஏற்படுத் தப்பட்டன.

இந்தியாவில் அதிக மக்கள்தொகை கொண்ட நகரங்களில், ஐந்தாவது பெருந கரமாக சென்னை இருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் விரை வான நகரமயமாக்கலுக்கு ஏற்ப, இயற்கைவளம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையில், பல்வேறு சவால் களை சமாளிக்கும் வகையிலும், காலநி லைக்கான செயல்திட்டத்தை தயாரிக் கும், C40 நகரங்களுக்கான கூட்டமை ப்பில் சென்னை மாநகராட்சி இணைந் துள்ளது. அந்தளவு முன்னெச்சரிக்கை யாக அரசு செயல்பட்டு வருகிறது.

**தீவிர சுகாதார சவாலாக காற்று மாசுபாடு இருக்கிறது!**

‘காற்று மாசுபாடு’ சமீபகாலமாக ஒரு தீவிரமான சுகாதார சவாலாக மாறியி ருக்கிறது’ என்று ஐ.நா. சொல்லியிருக்கி றது. நம்முடைய இந்தியத் தலைநகர் தில்லியில் அதனுடைய பாதிப்புகளைப் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவை அனைத்தையும் கவனத்தில் கொண்டுதிட்டங்களைத்தீட்டவேண்டும்.

மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு இங்கு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். தமிழ்நாடு அரசை பொறுத்தவரைக்கும், பொரு ளாதார மேம்பாட்டையும், சுற்றுச்சூழல் பொறுப்புணர்வையும் இரு கண்களாக நினைத்து தொடர்ந்து செயலாற்றி வருகி றோம். அதற்காகதான், நீர்நிலைகள் மறுசீரமைப்பு, Climate Resilient Cities உருவாக்குவது,

Biodiversityயைப் பாதுகாக்கு கிறது என்று முன்னெடுப்புகளை எடுக்கிறோம்.

இந்தப் பயணத்தில் சேர்ந்து, தமிழ் நாடு அரசுக்கு அனைத்து ஆலோசனை களும் வழங்க உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன்.

நாம் அனைவரும் இணைந்து, தமிழ் நாட்டை உலக அரங்கில் காலநிலை மீள் திறன் மற்றும் நீடித்த நிலைத்த வளர்ச்சி யில் மற்ற மாநிலங்களுக்கும், நாடுக ளுக்கும் முன்னோடியாக மாற்றிக் காட்டு வோம் என்பதை இந்தக் கூட்டத்தின் மூலமாக உறுதி எடுத்துக்கொண்டு, செயல்திட்டங்களை முன்னெடுப்போம்.

**இயற்கைக்கு கேடு விளைவிக்காதஉலகத்தை வரும் தலைமுறையினருக்கு வழங்குவோம்!**

நம்முடைய வழித்தோன்றல்களாக இந்த பூமியில் வாழப்போகின்ற குழந் தைகள் மற்றும் எதிர்கால சந்ததியின ருக்கு பசுமை யான இயற்கைக்கு கேடு கள் விளைவிக்காத உலகத்தை வழங்க நம்முடைய வாழ்நாளில் திட்டங்களை முன்னெடுத்தோம்; அதில் வெற்றிப் பெற்றோம் என்று வரலாறு சொல்ல வேண்டும். அதுதான் காலத்துக்கும் நமக் கான பெருமை என்று சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# ரூ.2 ஆயிரம் நிவாரணம் வழங்கும் பணி தொடக்கம்!

## துறைச் செயலாளர் அமுதா தகவல்!

விழுப்புரம், டிச. 7 -

பெஞ்சல் புயலால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு நிவா ரணம் 2 ஆயிரம் ரூபாய் வழங்க நியாய விலைக் கடைகள் மூலம் டோக்கன் வழங்கும் பணி தொடங் கப்பட்டுள்ளதாக வரு வாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை முதன்மைச் செயலாளர் அமுதா தெரிவித்துள்ளார்.

புயல் பாதிப்பிற்கு உள் ளான விழுப்புரம் மாவட் டத்திற்கு, பல்வேறு மாவட் டங்களில் இருந்து நிவாரண பொருட்கள் அனுப்பப் பட்டு வருகிறது.

இப்பொருட்கள் அனைத்து தாலுகா அலுவல கங்களுக்கும் அனுப்பப் பட்டு அங்கிருந்து பாதிக்கப் பட்ட கிராம பகுதிகளுக்கு அனுப்பும் பணியானது நடைபெற்று வருகிறது,.

இந்த பணியை, வரு வாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை முதன்மை செயலாளர் அமுதா, கூட்டுறவு துறை செயலாளர் இராதாகிருஷ் ணன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து, விழுப்புரத்தில் செய்தியா ளர்களிடம் பேசிய அமுதா ஐஏஎஸ், விழுப்புரம் மாவட் டத்தில் மழை வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட பகுதி களில் 7 பகுதிகளில் தவிர மற்ற இடங்களில் உள்ள வீடுகளுக்க்கு மின்சாரம் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறினார். வீடுகள் சேதம டைந்திருப்பது குறித்த கணக்கெடுக்கும் பணி தொடர்ந்து நடைபெறு வதாக கூறினார்.

அரசு அறிவித்த 2 ஆயி ரம் நிவாரணம் நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கப்பட உள்ள நிலை யில், இதற்கான டோக்கன் வழக்கும் பணி தொடங்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

---

புயலால் பாதிக்கப்பட்ட

# 3 மாவட்டங்களில் தேர்வு ஒத்திவைப்பு!

## ஜன. 2ல் தொடங்குகிறது!

சென்னை, டிச. 7 -

ஃபெஞ்சல் புயல் பாதிக் கப்பட்ட விழுப்புரம், கட லூர், திருவண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களில் அரையாண்டு தேர்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. அங்கு, ஜனவரி 2ம் தேதி முதல் 10ம் தேதி வரை அரையாண்டுத் தேர்வுகள் நடத்தப்படும் என பள்ளிக் கல்வித்துறை அறிவித் துள்ளது.

தமிழ்நாடு அரசின் உத்த ரவின்படி பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் வெளியிட் டுள்ள செய்திக்குறிப்பில், ஃபெஞ்சால் புயலின் மழை வெள்ளத்தால் கடலூர், விழுப்புரம், திருவண்ணா மலை மாவட்டங்களில் அதிகளவில் பாதிக்கப்பட் டுள்ளதை கருத்திற்கொண்டு, பள்ளி மாணவர்களின் நலன்கருதி அரை யாண்டுத் தேர்வுகளை இம்மாவட் டங்களில் மட்டும் ஒத்தி வைக்கப்படுவதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட 3 மாவட்டங்களிலும் வரும் ஜனவரி 2 முதல் 10ம் தேதிக் குள் அரையாண்டுத் தேர்வு களை நடத்திடவும், இதற் கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளவும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் களுக்கு அறிவுறுத்தப்பட் டுள்ளது. மழை நீர் வடிந்த பிறகு முறையாக பள்ளி திறக்கும்போது 10, 11 மற் றும் 12ஆம் வகுப்பு மாண வர்களுக்கான செய்முறைத் தேர்வுகளை நடத்திடவும், அனைத்து வகுப்புகளுக்கும் பாடங்கள் ஏதேனும் முடிக் கப்படாமல் இருந்தால் அதனை முடித்திடவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது

---

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கைக்கிணங்க

# கழக நிகழ்ச்சிகளுக்காக பேனர்கள், கட்அவுட், பிளக்ஸ் போர்டு வைக்கக்கூடாது!

## கழக நிர்வாகிகளுக்கு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 7 -**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக நிர்வாகிகளுக்கும் தொண்டர் களுக்கும் விடுத்த அறிக்கைக் கிணங்க கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் யாரும் கழக நிகழ்ச்சி களுக்காக பேனர்கள், கட்அவுட், பிளக்ஸ் போர்டு வைக்கக்கூடாது என்று கழக அமைப்புச் செயலா ளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைவராகப் பொறுப்பேற்ற நாள் முதல் “திராவிட முன்னேற்றக் கழக பொதுக்கூட்டங்கள், நிகழ்ச்சிகள் எதிலும் பொது மக்களுக்கு சிரமம் கொடுக் கும் வகையிலும், போக்கு வரத்துக்கு இடையூறு ஏற்ப டுத்தும் விதத்திலும் பேனர் கள், கட்அவுட்கள், பிளக்ஸ் போர்டுகள் வைக்கக்கூடாது என்று கழக நிர்வாகிகள் அனைவரையும் நான் ஏற்க னவே பல முறை அறிவுறுத் தியிருக்கிறேன். பொதுக் கூட்டம் அல்லது நிகழ்ச்சி



நடக்கும் இடத்தில் ஒன்று அல்லது இரண்டு பேனர்கள் விளம்பரத்திற் காக உரிய அனுமதி பெற்று, பாதுகாப் பாக வைக்கலாமே தவிர, சாலை மற்றும் தெரு நெடு கிலும் இரு சக்கர வாகனம் உள்ளிட்ட அனைத்து வாகன ஓட்டிகளுக்கும் மக் களுக்கும் பேரிடர் ஏற்படும் வகையில் வைப்பதை என் னால் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அது அறவே நிறுத்தப்பட வேண் டும். எனவே, பொதுமக்க ளுக்கு இடையூறு விளைவிக் கும் வகையில் கழக நிகழ்ச்சி களுக்காக பேனர்கள், கட் அவுட்கள், பிளக்ஸ் போர்டு கள் வைக்கக் கூடாது என்று மீண்டும் அறிவுறுத்த விரும்பு கிறேன். இந்த அறிவுரையை யாரேனும் மீறினால் அவர் கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நான் பங்கேற்கும் நிகழ்ச்சியாகவோ, கூட்டமாகவோ இருந்தால் அதில் நான் பங்கேற்க மாட் டேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். தலைமைக் கழக, மாவட்டக் கழக, ஒன் றிய, பேரூர், ஊராட்சி, வட் டக் கழக நிர்வாகிகள் அனை வரும் எனது இந்த அறிவு ரையை கிஞ்சிற்றும் மீறாமல் கடைப்பிடித்து திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கட்டுக்கோப்பான இயக்கம் என்பதை நிலைநாட்டிட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கி றேன்.” என பேனர்கள், கட் அவுட், பிளக்ஸ் போர்டு வைக்கக்கூடாது என்பதனை வலியுறுத்தி அறிக்கைகள் வெளியிட்டார்.

கழகத் தலைவர் அவர்க ளின் மேற்சொன்ன அறிக் கையினை ஒரு சில இடங்க ளில் - ஒரு சிலர் பின்பற்றாத வகையில் நடந்து கொள்வ தாக தலைமைக் கழகத்திற்கு தகவல்கள் வந்துள்ளன. இது கழகக் கட்டுப்பாட்டை மீறுகின்ற செயலாகும்.

எனவே, இனி வருங்கா லங்களில், எந்தவொரு இடத்திலும் முதலமைச்சர் கழகத் தலைவர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் கழகப் பொதுக்கூட்டங்கள், நிகழ்ச் சிகள் எதிலும் பொதுமக்க ளுக்கு இடையூறு விளைவிக் கும் வகையிலும் போக்கு வரத்துக்கு இடையூறு ஏற்ப டுத்தும் விதத்திலும் பேனர் கள், கட்அவுட்கள், பிளக்ஸ் போர்டுகள் வைக்கக் கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவுரையை யாரேனும் மீறினால் அவர் கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தலைமைக் கழகத்தின் சார் பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக அமைப் புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

கோவை சிட்கோவில்

# ரூ.126 கோடி மதிப்பில் தங்க நகை தொழில் பூங்கா!

## டெண்டர் கோரியது தமிழ்நாடு அரசு!

சென்னை, டிச. 7-

கோவை குறிச்சி சிட்கோ தொழிற்பேட் டையில் 126 கோடி ரூபாய் மதிப்பில் தங்க நகை தொழில் பூங்கா அமைப்ப தற்கான விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்ய தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.

கோவையில் கடந்த மாதம் 2 நாட்கள் சுற்றுப் பயணம் செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, கோவை குறிச்சி சிட்கோ தொழிற் பேட்டையில் 126 கோடி ரூபாய் மதிப்பில் தங்க நகை தொழில் பூங்கா அமைக்கப்படும் என முத லமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். இந்நி லையில், இத்திட்டத்தை செயல்படுத்தும் விதமாக விரிவான திட்ட அறிக் கையை தயார் செய்ய தமிழ்நாடு அரசு டெண் டர் கோரியுள்ளது.

விரிவான திட்ட அறிக்கை மற்றும் டெண் டர் ஆவணங்களை தயா ரிப்பதற்கான ஆலோசர் களை தேர்வு செய்ய டெண்டர் கோரப்பட் டுள்ளது.

3.41 ஏக்கரில் அமைய உள்ள தங்க நகை தொழில் பூங்காவால் ஏராளமா னோருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவ னம் தெரிவித்துள்ளது.

---

# தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சிக்கு நிதி ஒதுக்கப்படுகிறதா?

## மக்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி

புதுடெல்லி, டிச. 7-

“இந்திய தொல்லியல் துறையால் (ASI) கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ் நாட்டில் நடத்தப்பட்ட அகழாய்வு பணிகள் என் னென்ன? என்றும் அதற் காக போதிய நிதி ஒதுக்கப் பட்டுள்ளதா? என்றும்” தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப் துல்லா நாடாளுமன்றத் தில் கேள்விகளை எழுப்பி னார்.

அதற்கு பதிலளித்த மாண்புமிகு இந்திய ஒன் றிய கலாச்சாரம் மற்றும் சுற் றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷேகாவத் “இந்திய தொல்லியல் துறை (ASI), வடக்குப்பட்டு மற் றும் ஆதிச்சநல்லூரில் 2020 தொல்லியல் அகழாய்வு களை நடத்தியது.

2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் காஞ்சிபு ரம் மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம் வடக்குப்பட்டு பகுதியில் உள்ள தொல்லி யல் களத்தில் நடத்தப்பட்ட அகழாய்வுப் பணிகளின்படி இப்பகுதியில் கிடைத்த பொருட்கள் அனைத்தும் மத்திய கற்காலம் தொடங்கி 6 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையிலான ஆரம்ப மத் திய காலம் வரையிலான காலத்தைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இத்தொல்லியல் களத் தில் நடத்தப்பட்ட அகழ் வாராய்ச்சியின்போது மத் திய கற்கால கல் கருவிகள் மற்றும் தமிழ் பிராமி கல் வெட்டுகள், சிற்பங்கள், விலையுயர்ந்த கல் மணிகள்,



செப்பு நாணயங்கள் மற்றும் தங்கப் பொருட்கள் ஆகி யவை கண்டெடுக்கப்பட்டன.

2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் உள்ள தொல்லியல் களத்தில் நடத் தப்பட்ட அகழாய்வுப் பணி களின்படி இப்பகுதியில் கிடைத்த பொருட்கள் அனைத்தும் பெருங் கற்கா லத்தைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தொல்லியல் களத்தில் நடத்தப்பட்ட அகழ்வா ராய்ச்சியின்போது 160-க்கும் மேற்பட்ட கலசங்கள் மற்றும் புதைகுழிகள், எலும்புக்கூடு எச்சங்கள், கல்லறை பொருட் கள், பண்டைய உலோக ஆப ரணங்கள், தங்க கிரீடங்கள், உயர்தர வெண்கலப் பொருட்கள், மட்பாண்டங் கள் ஆகியவை கண்டெடுக் கப்பட்டன. கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட அகழாய்வுப் பணிகளுக்கு மூன்று கோடியே இருபத்து எட்டு இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்திரண்டு ரூபாய் (Rs. 3,28,94,852) செலவு செய்யப்பட்டுள் ளது” என்று தெரிவித் துள்ளார்.

---



நீலகிரி மாவட்ட பா.ஜ.க. சிந்தனையாளர் அணித் தலைவர் வழக்கறிஞர் கருணாநிதி மாவட்டக் கழக அலுவலகம் உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக், தேர்தல் பணிச் செயலாளர், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தார். மாவட்டக் கழகச் செயலாளர் இவரை கருப்பு சிவப்பு துண்டு அணிவித்து வரவேற்றார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ரவிகுமார், மாவட்டப் பொருளாளர் ஏ.நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.திராவிடமணி, எஸ்.காசிலிங்கம், நெல்லியாளம் நகரச் செயலாளர் மு.சேகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அமிர்தலிங்கம், எம்.சதக்கத்துல்லா, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ந.சிவசுப்ரமணியம், நெல்லியாளம் நகரக் கழக நிர்வாகிகள், நகரமன்ற உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள் சேகர், யுகேஷ், முகேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி சேலம் புனித பால் மேல்நிலைப்பள்ளி மற்றும் நீலாம்பாள் மேல் நிலைப்பள்ளி மாணவர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார். உடன் மாவட்ட அமைப்பாளர் ஆர்.கோகுல் காளிதாஸ், மாநகர அமைப்பாளர் மணிகண்டன், மாநகர துணை அமைப்பாளர்கள் சிங்காரவேலன், சுந்தர் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.